இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 27-07-2023

# பிரதமருக்கு எதிராக பா.ஜ.க.?

மணிப்பூர் கலவரத்தை அடக்கத்தான் துப்பில்லை என்றால் அதற்கான பதிலைக் கூடச் சொல்வதற்கு துப்பில்லாத ஆட்சியாக ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி இருக்கிறது. நாடாளுமன்றத்துக்கு வந்து இன்னமும் பதில் சொல்லவில்லை பிரதமர் நரேந்திர மோடி!

உலக நாடுகளுக்கு எல்லாம் போய் - அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் எல்லாம் முழங்கி வரும் பிரதமர் நரேந்திர மோடியால் இந்திய நாடாளு மன்றத்துக்கு வந்து ஏன் பேச முடியவில்லை? அது INDIA நாடாளுமன்றமாக இருப்பதாலா?

மே மாதம் 4 ஆம் தேதி எரியத் தொடங்கியது மணிப்பூர். அன்றைய தினம் கர்நாடக தேர்தல் பிரச்சாரத்தில் இருந்தார் பிரதமர்.

*** மே 19 - 21 ஜப்பானில் இருந்தார்.**
*** மே 21 - 22 பப்புவா நியூ கினியாவில் இருந்தார்.**
*** மே 22 - 24 ஆஸ்திரேலியாவில் இருந்தார்.**
*** ஜீன் 20 - 23 அமெரிக்காவில் இருந்தார்.**
*** ஜீன் 24 - 25 எகிப்தில் இருந்தார்.**
*** ஜீலை 13 - 14 பிரான்சில் இருந்தார்.**
*** ஜீலை 15 - துபாயில் இருந்தார்.**

அவரை எந்த நாட்டுக்கும் போக வேண்டாம் என்று சொல்லவில்லை. அது அவர் விருப்பம். வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகத்தானே பிரதமர் ஆகி இருக்கிறார். போகட்டும்.

ஆனால் மணிப்பூருக்கு ஏன் செல்லவில்லை? மணிப்பூர் பிரதிநிதிகளை ஏன் அழைத்துப் பேசவில்லை? மணிப்பூரை ஏன் கட்டுப்படுத்தவில்லை? கட்டுப்படுத்த ஏன் முயற்சிக்கக் கூட இல்லை? இதுதான் இந்திய மனங்களின் உள்ளத்தில் எழுந்துள்ள கேள்வி.

இது ஏதோ எதிர்க்கட்சியின் கேள்வி என்று அரசியல்படுத்தி விட வேண்டாம். பா.ஜ.க.வில் உள்ள மனசாட்சி உள்ள மனிதர்களின் கேள்விதான் இது.

மணிப்பூர் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் பாவோலியன்லால் ஹொக்கிப் அளித்த பேட்டியில் என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள்...

**“பிரதமர் மோடி, மணிப்பூர் விவகாரத்துக்கு முக்கியத்துவம் தராமல் அமெரிக்க பயணத்துக்கு முன்னுரிமை கொடுத்து தவறு செய்து விட்டார். அவரது பயணத்துக்கு முன்னதாக அவரைச் சந்திக்க நாங்கள் பல முறை முயற்சி செய்தோம். ஆனால் இப்போது வரையிலும் பிரதமர் மோடியைச் சந்தித்து எங்களால் முறையிட முடியவில்லை. ஒரு வாரம் தாமதம் தள்ளிப்போடுவதே மிகப்பெரிய தாமதம் ஆகும் இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி பேசுவதற்கு 78 நாட்கள் ஆனது. மைத்தி போராளிக் குழுக்கள், போலீஸ் கமாண்டோக்களுடன் சேர்ந்து நடத்திய தாக்குதல்களே இந்த வன்முறைக்கு 99 சதவிகிதம் காரணம்” என்று சொல்லி இருக்கிறார் பா.ஜ.க. எம்.எல்.ஏ.**

**“ஒரு சார்புடைய அரசாங்கம் அமைதிக்கு கேடு விளைவிக்கும்” என்றும் பா.ஜ.க. எம்.எல்.ஏ.வாக இவர் சொல்லி இருக்கிறார். மணிப்பூர் போலீசாரும், வன்முறைக் குழுக்களும் சேர்ந்து நடத்திக் கொண்டு இருக்கும் கொடூரம் இது என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ. சொல்கிறார்.**

கடந்த ஜீன் 20 ஆம் தேதி பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். ‘ஆளும் பா.ஜ.க. அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாக’ பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்பது எம்.எல்.ஏ.க்கள் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

* கரம்ஷியாம் சிங்
* தோக்சோம் ராதே ஷியாம் சிங்
* நிஷி கண்ட் சிங் சபம்
* குவைராக்பம் ரகுமணி சிங்
* பிரோஜன் சிங்
* டி.ரபிந்ரோ சிங்
* எஸ்.ரஜேன் சிங்
* எஸ்.கேபி தேவி
* ஒய்.ராதே ஷ்யாம் – ஆகிய ஒன்பது பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதம் அனுப்பி இருந்தார்கள்.

*** பா.ஜ.க. அரசு மீதும், நிர்வாகத்தின் மீதும் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுக்க சிறப்பான நடவடிக்கை உடனடியாக எடுத்தாக வேண்டும்.**

*** மைத்தி மற்றும் குக்கி இனத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.**

*** அமைதியை நிலைநாட்டுவதற்கு மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான பாதுகாப்புப் படைகளை நிறுத்த வேண்டும்.**

*** மாநிலத்தின் ஒருமைப்பாட்டில் எந்தவிதமான சமரசமும் செய்யக் கூடாது.**

***குறிப்பிட்ட சமூகத்துக்கான தனிநிர்வாகம் என்ற வேண்டுகோள் எக்காரணத்துக்காகவும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. -**

என்ற ஐந்து கோரிக்கைகளை பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் வைத்திருந்தார்கள். அதற்கும் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் செவி சாய்க்கவில்லை. மணிப்பூர் முதலமைச்சர் பிரேன்சிங், உடனே தனக்கு ஆதரவான எம்.எல்.ஏ.க்கள் சிலரைப் போய் அமித்ஷாவை சந்திக்க வைத்தார். அதாவது சொந்தக் கட்சிக்கார எம்.எல்.ஏ.க்கள் சொல்வதையே இவர்கள் கேட்கவில்லை.

மணிப்பூரில் உள்ள தேவாலயங்கள் எரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மிசோரம் மாநில பா.ஜ.க.வின் துணைத் தலைவர் ஆர்.வன்ராம்சுவாங்கா தனது பதவியில் இருந்து விலகி இருக்கிறார். இதுவரை 357 தேவாலயங்கள் எரிக்கப்பட்டு இருப்பதாக பா.ஜ.க. துணைத் தலைவர் ஆர்.வன்ராம்சுவாங்கா சொல்கிறார்.”

**இந்த செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நான் பா.ஜ.க. துணைத் தலைவர் பதவியில் இருந்து விலகுகிறேன். தேவாலயங்கள் எரிக்கப்பட்டதை மணிப்பூர் முதலமைச்சர் பிரேன்சிங்கும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் கண்டிக்கவில்லை. ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஒன்றிய அரசிடம் இருந்து ஒரு வார்த்தை கூட கண்டனம் வரவில்லை. மணிப்பூரில் கிறித்துவ தேவாலயங்கள் எரிக்கப்பட்டதற்கு மாநில அரசு, ஒன்றிய அரசு அதிகாரிகள் ஆதரவு அளித்தார்கள் என்று நம்புகிறேன்”** என்று மிசோரம் மாநிலத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் பா.ஜ.க. துணைத் தலைவர் ஆர்.வன்ராம்சுவாங்கா குற்றம்சாட்டி இருக்கிறார். ஜீலை 14 ஆம் தேதி பா.ஜ.க. துணைத் தலைவர் பதவியில் இருந்து அவர் விலகினார்.

குக்கி சமூக மக்களுக்கு தனி உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கடந்த மே மாதமே மணிப்பூரைச் சேர்ந்த பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 10 சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் பிரேன்சிங்குக்கு கடிதம் எழுதினார்கள். அதில் 7 பேர் பா.ஜ.க.வைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள்.

**இவை எல்லாம் எதைக் காட்டுகிறது. மனசாட்சியுள்ள சில பா.ஜ.க. பிரமுகர்களுக்கு எதிராகவே பிரதமரின் செயல்கள் இருக்கின்றன என்பதைக் காட்டவில்லையா?**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.7.2023) தலைமைச் செயலகத்தில், தைவான் நாட்டைச் சேர்ந்த பெகட்ரான் நிறுவனத்தின் குழுமத் தலைவர் டிஎச் துங் (TH Tung) அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து பேசினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு. பெகட்ரான் தொழில்நுட்பம் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன துணைத் தலைவர் ஜேசன் செங் (Jason Cheng), தலைமை செயல் அலுவலர் ஜான்சன் டெங் (Johnson Deng), மூத்த துணைத் தலைவர் டெனீஸ் யாவ் (Ms. Denese Yao), தலைமை தளவாட அதிகாரி (Chief Logistics Officer) சார்லஸ் லின், இயக்குநர் மிங்சுன் சேய் (Ms. MingChun Tsai), மூத்த இயக்குநர் தினகர் மல்லாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## தருமபுரியில் சாரல் மழை!

தருமபுரி, ஜூலை 26 -
தமிழகத்தில் உள்ள சில மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் தருமபுரி மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக காலை முதலே சாரல் மழையும், மாலை நேரத்தில் மிதமான மழையும் பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் மதியம் திடீரென மழை பெய்ய தொடங்கியது. தருமபுரியில் மிதமான மழையும், நல்லம்பள்ளி அதனை சுற்றி உள்ள பகுதிகளில் கனமழையும் பெய்தது.

அதேபோல் தருமபுரி, பென்னாகரம், கம்பைநல்லூர், அரூர், பாலக்கோடு, காரிமங்கலம், மகேந்திரமங்கலம், நல்லம்பள்ளி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் மழை பெய்த நிலையில் இரவு முழுவதும் விடிய விடிய சாரல் மழை பெய்துள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி அவர் எழுதி, சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ள “இந்திய இலக்கியச் சிற்பிகள் – கலைஞர் மு. கருணாநிதி” நூலினை வழங்கினார். உடன் சென்னை சாகித்ய அகாதெமி அலுவலர் சந்திரசேகரராஜ், வெளியீட்டுப் பிரிவு அலுவலர் முனைவர் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

### இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து! மணிப்பூரில்

## இரு சமூகங்களை பற்றி எரிய வைப்பது மோடி ஆட்சி!

### மார்க்சிஸ்ட் சீதாராம் யெச்சூரி குற்றச்சாட்டு!

மதுரை, ஜூலை 27 -
இரு சமூகங்களை பற்றி எரிய வைப்பதுதான் மோடி ஆட்சி. மணிப்பூர் சம்பவத்தால் இந்திய இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சீதாராம் யெச்சூரி தெரிவித்து உள்ளார்.

மதுரை, முனிச்சாலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநில உரிமை பாதுகாப்பு மாநாடு 23ந் தேதி நடந்தது.

மாநாட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அகில இந்திய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி பேசியதாவது:-

இந்திய கூட்டாட்சி மிகப்பெரிய தாக்குதலில் சிக்கியுள்ளது என்பதை மணிப்பூர் சம்பவம் காட்டுகிறது. நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை, எல்லோருக்கும் சம உரிமை என்பதே கூட்டாட்சியாக உள்ளது. ஆனால், இரட்டை இன்ஜினாக உள்ள மோடி ஆட்சி இரு சமூகங்களை நேருக்கு நேர் நிறுத்தி பற்றி எரியச் செய்யும் வகையில் செயல்படுகிறது. இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.



நாட்டில் பழங்குடி மக்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பெண்களும் தாக்குதலுக்கு உள்ளாகாத நாட்களே இல்லை. ஒரே நாடு, ஒரே ஆட்சி, ஒரே வரி, ஒரே மொழி, ஒரே அரசு, ஒரே தலைவர் என்பதை நம் மீது திணிக்க முயற்சிக்கின்றனர். மாநிலங்கள் இல்லாமல் இந்தியா கிடையாது. ஆனால் அந்த உணர்வின்றி மோடி அரசு செயல்பட்டு வருகிறது. ஆளுநர்கள் என்ற பெயரில் பா.ஜ.வின் நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துகின்றனர்.

தற்போது ஒன்றிய அரசு பொதுப்பட்டியலை கடந்து, மாநில பட்டியலில் உள்ள துறைகளை கைப்பற்ற தன்னிச்சை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாநிலங்கள் மீது அப்பட்டமான நிதி அதிகார மீறல்களை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

### விருதுநகர் மாவட்டம் வெடிபொருள் தொழிற்சாலை விபத்தில்

## உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிதி உதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 27-
விருதுநகர் மாவட்டம் வெடிபொருள் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், தாயில்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான வெடிபொருள் தொழிற்சாலையில் 25.7.2023 அன்று பிற்பகல் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீவிபத்தில் விஸ்வநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.முருகேஸ்வரி, க/பெ.ராமச்சந்திரன் (வயது 39) மற்றும் மண்குண்டாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பானு, க/பெ.சண்முகம் (வயது 39) ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்களின் அறிவிப்பு பற்றி அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் டி.ஆனந்த் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி ஆகியோர் தலைமையில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (25.7.2023) வழங்கினார்கள். உடன் காவல்துறை தலைவர் (சமூக நீதிமன்றம் மனித உரிமைகள் பிரிவு) ரூபேஸ்குமார் மீனா, தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.